**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மகாதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- |
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


நாள்: **29.06.2021**

**பெறுநர்**
**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**ஐயா,**

**வணக்கம்**

**பொருள் : நிர்வாகம் - பகுதிநேர பணியாளர்கள் - நிரந்தரம் குறித்து**

**பார்வை :** 1. (Per) CMD TANGEDCO Proceeding No.76, dated 09 November 2020

தமிழ்நாடு மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக சொற்ப கூலித்தொகையில் துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வந்தனர். இவர்களை நிரந்தரப்படுத்தி சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்க கோரி உச்சநீதிமன்றம் வரை சென்று தீர்ப்பை பெற்றது எங்களது அமைப்பு.

அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து மீண்டும் தொடர்ந்து பணியாற்றுபவர்களை எங்களது கோரிக்கையின் அடிப்படையில் நிரந்தரப்படுத்தி சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்கியது. இதில் பல்வேறு காரணங்களால் பலர் விடுபட்டு இருந்தனர்.

விடுப்பட்டவர்களின் விபரங்களை வட்ட அலுவலகத்திலிருந்து வாரிய உத்திரவுகளின் படி பெறப்பட்டு தலைமைப்பொறியாளர் பணிமையப்பு அலுவலகத்தில் பல மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் கடந்த 22.12.2016 அன்று பகுதிநேர பணியாளர்களின் கோரிக்கைகளோடு இதர கோரிக்கைகளையும் இணைத்து கூட்டு முறையீடு பெருந்திரள் போராட்டம் நடத்தினோம். அந்த போராட்டத்தையொட்டி

பேச்சுவார்த்தை நடத்திய பொழுது அப்போதைய வாரிய உயர் அதிகாரிகளால் பகுதிநேர ஊழியர்களுக்கு 31.01.2017-க்குள் உத்திரவு வழங்கப்படும் என உறுதி அளித்தத்தின் பேரில் இருதரப்பிலும் கையொப்பம் பெற்று அந்த போராட்டம் முடிவு பெற்றது.

அதன்பின் பல்வேறு கட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் பல வட்டங்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு விட்டது. இன்னும் சில வட்டங்களுக்கு விபரங்கள் கோரப்பட்டு அது திரும்ப பெறுவதில் காலதாமதம் ஆகிவிட்டது. தற்போது இந்த பாதிக்கப்பட்ட பகுதிநேர ஊழியர்களுக்கு முழுமையான விவரங்களை பெற்றும் உரிய காலத்தில் நிரந்தரத்திற்கான உத்திரவு நிர்வாகத்தின் காலதாமதத்தால் வழங்க இயலவில்லை. இதற்கிடையில் பார்வையில் கண்ட வாரிய உத்தரவின் மூலம் இந்த பணிகளை முழுமையாக அவுட்சோர்சிங் விடுவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்தது.

எனவே, விபரங்கள் இருந்தும் நிர்வாகத்தின் காலதாமதத்தால் பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்களுக்கு ஏற்கனவே இவர்களின் நிரந்தரம் சம்மந்தமாக உடன்பாடு கண்ட காரணத்தையும் கணக்கில் கொண்டு நிரந்தரம் செய்வதற்கான உத்திரவு வழங்க தகுந்த நடவடிக்கை எடுத்திடுமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சரை கேட்டுக்கொள்கிறோம்.

**நன்றி !**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்